# Lanka IOC PLC

## எரிபொருள் நிலைய விநியோகஸ்தர்களுக்கான விண்ணப்ப படிவங்களை கோருதல் (எரிபொருள் நிரப்பு நிலையங்கள்)

லங்கா ஐ ஒ சி பிஎல்சி இலங்கையில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தங்கள் சேவையை வித்தியாசமான அனுபவங்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவருகிறதுடன் சர்வதேச தரம் வாய்ந்த உற்பத்திகளை இலங்கைக்கு வழங்க கடமைப்பட்டுள்ளது. எரிபொருள் நிலையங்களை விரிவுபடுத்தும் நோக்கில் நாடு முழுவதுமுள்ள தரமான வியாபாரங்கள், எரிபொருள் நிலையம் அமைக்க தகுதியான நிலம் உடையவர்களை பங்காளராக சேர்ந்து சேவை செய்ய அழைக்கின்றது. அதன்படி நிறுவனம் இலங்கையில் எரிபொருள் நிலையங்களை கீழ் குறிப்பிட்ட இடங்களில் அமைக்க திட்டமிட்டுள்ளது.

| இல. | மாகாணம் | மாவட்டம் | அமைவிடம் | பாதை இல. | பெற்றோல் | டிசல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மேல் மாகாணம் | கம்பஹா | கட்டான (வெலிஹேன/ கட்டான ஆட்டிகல வத்த சந்தி வரை உள்ள பாதை), நீர்கொழும்பு / கிரியுள்ள பாதை வெலிஹேனவில்லிருந்து கட்டான பாதை சந்தி | (B468) ( B322) | 33 | 40 | 73 |
| 2 | | கம்பஹா | A3 நீர்கொழும்பு வீதியில் பேலியகொடயிலிருந்து ஹெந்தலை சந்திவரை | (A3) | 150 | 150 | 300 |
| 3 | | கம்பஹா | யக்கதுவ சந்தி (கட்டுநாயக்க, வெயங்கொடை வீதியில் 1 கிமீ வரை) | (B208) | 70 | 100 | 170 |
| 4 | | கம்பஹா | B208 வீதியில் மினுவங்ககொட சந்திக்கும் நய்வல சந்திக்கும் அருகில் | (B208) | 150 | 100 | 250 |
| 5 | | கம்பஹா | பேஸ்லைன் வீதி, அமன்தொலுவ, சீதுவை. | | 60 | 80 | 140 |
| 6 | | கொழும்பு | 176 பஸ்வீதி ராஜகிரியிலிருந்து நுகேகொட வரை (நாவல வீதியில்) | (B307) | 200 | 100 | 300 |
| 7 | | கொழும்பு | அம்பத்தலை வீதி, சேதவத்தை அருகில் | (AB10) | 100 | 150 | 250 |
| 8 | | கொழும்பு | கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் | | 300 | 200 | 500 |
| 9 | | கொழும்பு | வாகா (அவிஸ்சாவலை) பிரதேசம் | (B188) | 40 | 40 | 80 |
| 10 | | கொழும்பு | துறைமுக நகரம் (Colombo Port City) | | 450 | 200 | 650 |
| 11 | | களுத்துறை | B84 வீதியில் ஹொரனையில் இருந்து பிலியந்தல வரை | (B84) | 120 | 200 | 320 |
| 12 | மத்திய மாகாணம் | நுவரெலியா | கலஹா பாதை, ஹந்தவல்பிடிய உபதபால் அலுவலகப் பகுதி (ஹேவாஹெட்ட) | (B364) | 33 | 40 | 73 |
| 13 | | நுவரெலியா | லியன்வெல்ல - புரூக் சய்ட் பாதை, ஹரஸ்பெத்த பஸ்தரிப்பு நிலைய பகுதி | | 33 | 40 | 73 |
| 14 | | நுவரெலியா | ஹந்தவல்பிடிய உபதபால் அலுவலகப் பகுதி | (B 364) | 26 | 50 | 76 |
| 15 | | நுவரெலியா | நுவரெலியா நகரசபை எல்லைக்குள் | | 100 | 100 | 200 |
| 16 | | நுவரெலியா | டிக்கோயா, ஹட்டன். | (B149) | 70 | 100 | 170 |
| 17 | | நுவரெலியா | பொகவந்தலாவை பிரதேசம் | (B339) | 50 | 60 | 110 |
| 18 | | கண்டி | பிலிமத்தலாவ சந்தியிலிருந்துA5 வீதியில் 6 கிமீ வரை (பேராதெனிய கம்பளை வீதி) | (A5) | 100 | 150 | 250 |
| 19 | | கண்டி | அட்டபாகே கம்பளை நுவரெலிய வீதி | (B462) | 100 | 150 | 250 |
| 20 | | மாத்தளை | B462 வீதியில் எலவல சந்தியிலிருந்து வத்தேகம வரை | | 80 | 150 | 230 |
| 21 | தென் மாகாணம் | மாத்தறை | தன்தெனிய சந்தி | (B 595) | 33 | 40 | 73 |
| 22 | | மாத்தறை | B-606 வீதியில் ஊருபொக்க நகரத்திலிருந்து கொட்டபொல சந்தி வரை | (B606) | 50 | 60 | 110 |
| 23 | | காலி | மிஹிரிபென்ன பகுதி | A2 | 105 | 125 | 230 |
| 24 | | ஹம்பாந்தொட்டை | சூரியவெல, அம்பலன்தொட்ட வீதி | | 100 | 150 | 250 |
| 25 | வட மத்திய மாகாணம் | அநுராதபுரம் | புத்தளம், அநுராதபுரம், திருகோணமலை, பிரதான பாதை-பஹலமாரகஹவெல பகுதி, ஒட்டப்புவ திமிபிரிவெவ இணைப்பு பாதை | (A 12) | 60 | 100 | 160 |
| 26 | | அநுராதபுரம் | மதவச்சி-ஹொரொவபொத்தான (கடவைப்பகுதி) பாதைகள் இணையும் இடம் | (B 282 ) (B 538) | 72 | 100 | 172 |
| 27 | | அநுராதபுரம் | சியம்பலகஸ்வெவ பகுதி | A-9 | 66 | 72 | 138 |
| 28 | | அநுராதபுரம் | கெபிதிகொல்லேவ சந்தி பகுதி | (A-29 + B 211) | 85 | 125 | 210 |
| 29 | | அநுராதபுரம் | அநுராதபுரம் புத்தளம் வீதியில் மஹாபுலன்குளம் | (A12) | 60 | 100 | 160 |
| 30 | | பொலன்னறுவ | AB 44 வீதியில் தலுக்கன்ன, திமுலாகல அருகில் | (AB 44) | 80 | 150 | 230 |
| 31 | ஊவா மாகாணம் | பதுளை | எட்டம்பிடிய நகர பகுதி | (A5 + B43) | 60 | 105 | 165 |
| 32 | | மொனராகலை | குடாஓய | (A2 Road - Kudaoya Bridge Area) | 60 | 105 | 165 |
| 33 | | மொனராகலை | A2 வீதியில் தனமன்வில நகரம் முதல் குடாஓய வரை | (A2) | 80 | 120 | 200 |
| 34 | | மொனராகலை | B35 வீதியில் புத்தல மணிக்கூட்டு கோபுரத்திலிருந்து கதிர்காம வீதி வரை 5 கிமீ | (B35) | 60 | 80 | 140 |
| 35 | | மொனராகலை | B427 வீதியில் உடவலவ்வ பகுதி | (B427) | 80 | 120 | 200 |
| 36 | | மொனராகலை | மொனராகலை நகர பகுதி | | 100 | 150 | 250 |
| 37 | வட மாகாணம் | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை-மரதன்கேனி பாதை, (ஆம்பன் பகுதி) முருகன் கோவில் வீதி | (B 371) | 40 | 72 | 112 |
| 38 | | யாழ்ப்பாணம் | நெல்லியடி சந்தி அருகில், பேதுருமுனை வீதி, யாழ்ப்பாணம். | | 20 | 40 | 60 |
| 39 | | யாழ்ப்பாணம் | AB17 வீதியில் மாணிப்பாய் வீதி, ஆணைக்கோட்டை சந்தி அருகில் | (AB17) | 60 | 120 | 180 |
| 40 | | முல்லைத்தீவு | மாங்குளம்-முல்லைத்தீவு பிரதான பாதை, கறுப்படமறிப்பு | (A 34) | 26 | 52 | 78 |
| 41 | | வவுனியா | மன்னார் பாதை, பூவரசன் குளம் கோவில் பகுதி | (A 30 ) | 33 | 60 | 93 |
| 42 | | மன்னார் | நாவற்குழி, காரைத்தீவு மன்னார் பாதையில் வெல்லங் குளத்திலிருந்து, மூன்றாம்பிட்டி சந்தி பகுதி வரை | (AB 32) | 52 | 100 | 152 |
| 43 | | கிளிநொச்சி | A9 வீதியில் 247 கி.மீ முதல் 261 கி.மீ வரை கிளிநொச்சி அருகில் | (A9) | 100 | 200 | 300 |
| 44 | | கிளிநொச்சி | பரந்தன் நகரம் | | 50 | 100 | 150 |
| 45 | | கிளிநொச்சி | கிளிநொச்சி | | 100 | 120 | 220 |
| 46 | கிழக்கு | அம்பாறை | சம்மாந்துறை, காரைத்தீவு அம்பாரை வீதி | ( A31) | 60 | 80 | 140 |
| 47 | மாகாணம் | மட்டக்களப்பு | (A15) திருகோணமலை மட்டக்களப்பு பிரான விதி | (A15) | 60 | 90 | 150 |
| 48 | வட மேல் மாகாணம் | குருநாகலை | பொல்பித்திகம | (B159) | 80 | 100 | 180 |
| 49 | | குருநாகலை | B326 வீதியில் திவுல்லேவ மஹவோ - மடுகல்ல வீதி | (B326) | 60 | 80 | 140 |
| 50 | | குருநாகலை | கண்டி கப்பட்டிகொட வீதி, உயன்தென. | (B264) | 70 | 40 | 110 |
| 51 | | புத்தளம் | மன்னார் நோக்கி 28 கி.மீ | (B379) | 40 | 60 | 110 |
| 52 | சப்பரகமுவ மாகாணம் | கேகாலை | ரம்புக்கனை | | 100 | 150 | 250 |

**விநியோகத்தர் உரிமையாளர் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் (இலக்கம் 1 முதல் 49 வரை)**

தெரிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் எரிபொருள் நிலையத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். எரிபொருள் நிலையங்களை மேற்கொள்ள நிறுவனத்தின் / விநியோகத்தவரின் பங்களிப்பு பின்வருமாறு.

**விநியோகத்தவரின் பங்களிப்பு**

விநியோகத்தவர் காணியின் உரிமை தெளிவாக உறுதிப்படுத்தப்பட வேண்டும், நிறுவனத்தின் அறிவுறுத்தலுக்கமைய நிலம் சமபடுத்தப்பட்டு, நிலத்துக்கான கற்களைப்பதித்தல் (Paver driveway), கூரை (canopy), விற்பனை நிலையம் / மலசலகூட வசதி, வளவு மதில், ஒளி விளக்குகள், காற்று வசதி, குழாய்கிணறு ஆகியன அமைப்பதுடன், நிறுவனத்தால் தீர்மானிக்கப்பட்ட ஏனைய வசதிகள் செய்யப்பட வேண்டும், அத்துடன் திட்டமான விநியோகத்தவர் ஒப்பந்தம் நிறுவனத்துடன் கைச்சாத்து செய்யப்பட வேண்டும், கொடுக்கப்பட்ட நிலத்திற்கு எரிபொருள் நிலையம் அமைப்பதற்காக உள்ளூர் மாநகரசபையின் அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்

**நிறுவனத்தின் பங்களிப்பு**

அடையாள கம்பம், எரிபொருள் தாங்கிகள், எரிபொருள் நிரப்பும் இயந்திரங்களை, விளம்பரப்பலகை, நிறுவனத்தால் தீர்மானிக்கப்பட்ட ஏனைய வசதிகளை வழங்குதல்

**நிலதேவைகள்**

எரிபொருள் நிலையம் அமைப்பதற்கு நில சொந்தக்காரர்கள் / குத்தகைகாரர்கள் / நெருங்கிய உறவினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. எதிர்பார்க்கப்படுகின்ற நிலத்தின் அளவு குறைந்தது 120 அடி நீளமும் 100 அடி அகலமுமாக இருக்க வேண்டும். சிறிய இடங்களும் பிரதான இடங்களில் அமைந்திருந்தால் கவனத்தில் எடுக்கப்படும் காணியின் உரிமை உறுதிப்படுத்தப்படுவதுடன் விண்ணப்பதாரர் அதற்குரிய ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்கவேண்டும். சிறந்த / அருகிலுள்ள இடத்தை தெரிவுசெய்யும் உரிமை நிறுவனத்துக்குள்ளது.

நிலம் விண்ணப்பதாரருக்கு சொந்தமானதாக இல்லாவிடின் தனிநபர்/ நிறுவனம் நில உரிமையாளரிடம் விற்பனை ஒப்பந்தம் அல்லது நீண்டகால 15 வருட குத்தகை ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டு ஒப்பந்த பிரதியையும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் விண்ணப்பதாரி நேர்முக தேர்வுக்கு அழைக்கப்பட்டு தெரிவு செய்யப்படுவாராயின், அவர் நிலத்தை கொள்வனவு செய்து/ அல்லது குத்தகைக்கு எடுத்து நில சம்பந்தமான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

விநியோகத்தர் உரிமையான எரிபொருள் நிலையத்துக்கு நீண்டகால குத்தகைக்கு எடுக்கப்படமாட்டாது.

எவ்வாறாயினும் நிறுவனம் எவ்வேளையிலும் விண்ணப்பதாரியின் நிலத்தை நீண்டகால குத்தகைக்கு எடுத்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், நிறுவன உரிமையான எரிபொருள் நிலையம் அமைக்க கோரலாம். (நிறுவன உரிமையான எரிபொருள் நிலையத்துக்கு லங்கா ஐ ஒ சி நிறுவனத்திற்கு நிலத்தை நீண்டகால குத்தகைக்கு எழுதப்படவேண்டும் (15 வருடம்).

**தேவையான முதலீடு:** சராசரி 20 மில்லியன் (எரிபொருள் நிலையம் அமைக்க தேவையான நிலம் தவிர்த்து)

**விண்ணப்பதாரருக்குரிய தகுதிகள்**

விண்ணப்பதாரார் பின்வரும் தகுதிகளை உடையவராக இருக்கவேண்டும்

1. வயது : விண்ணப்பிக்கும் போது 21 வயதுக்கு குறையாது இருக்க வேண்டும்
2. தேசிய இனம் : இலங்கை பிரஜை
3. கல்வித்தகமை : குறைந்தது பொதுதராதர சாதாரண பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
4. ஏனைய தகுதி : தனிநபர் அல்லது / நிறுவனம் 3 அல்லது 3க்கு மேற்பட்ட LIOC விநியோகஸ்தராக இருப்பின் விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பதாரார் சட்டத்தினால் தண்டனையடைந்த குற்றவாளியாகவோ மனநோயாளியாகவோ இருக்க கூடாது.

**நெருங்கிய உறவினர்களுக்கான வரைவிலக்கணம்**

விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட எந்தவொரு விண்ணப்பத்தகுதிகளும் அற்றவராயின் அல்லது விநியோகத்தர் உரிமையை தனியாக பெற்றுக்கொள்ளவிரும்பாவிடின் அவருடைய நெருங்கிய உறவினர் அதாவது கணவன் மனைவி பெற்றோர் பிள்ளைகள் உடன் பிறந்த சகோதர சகோதரிகள், மருமகன்கள், மருமகள்களும் விண்ணப்பிக்கலாம். நெருங்கிய உறவினர்கள் விண்ணப்பதகுதி பெற்றிருப்பதுடன் காணி உரிமையாளரின் உறவை உறுதிப்படுத்தி விருப்புக்கடிதம் கொடுக்கப்பட வேண்டும்.

**பங்குடமை வியாபார நிறுவனம் / வரையறுக்கப்பட்ட நிறுவனம் / கூட்டுறவுச்சங்கங்கள்**

பங்காளர்கள் / குத்தகைகாரர்கள் அல்லது பங்கு நிறுவனங்கள் தங்கள் தகமையை தனித்தனி பங்காளராக உறுதிப்படுத்த வேண்டும். அவர்கள் தனித்தனி விண்ணப்பங்களை நிரப்பி ஒரே கடித உறையில் அனுப்பவேண்டும். நில உரிமையாளர்கள் மேற்குறிப்பிட்ட உறவினர் நிலத்தில் பங்கு இல்லையென்றாலும் அவரை பங்குதாரராக சேர்க்க விரும்பின் வேறு வேறு விண்ணப்பங்கள் ஒரே கடித உறையில் இட்டு அனுப்படவேண்டும். வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் கூட்டுறவு சங்கங்களும் தேவையான நிலம் இருக்குமாயின் விண்ணப்பிக்கலாம்.

**மற்றைய வீதிமுறைகள்**

(அ) விநியோகத்தராக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி எரிபொருள் நிலையத்தை தினசரி மேற்பார்வை செய்பவராக இருப்பார். இவர் வேறு தொழில் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) விநியோகத்தர் குறைந்த பட்சம் 3 நாட்களுக்குரிய இருப்புக்கள் (எரிபொருள்) வைத்திருக்க வேண்டும். மேலும் நிறுவனத்தால் தீர்மானிக்கப்பட்ட உராய்வு நீக்கல்கள் (Lubricants) கையிருப்பில் வைத்திருக்க வேண்டும்.

(இ) விநியோகத்தர் தெரிவு செய்த பின் உத்தரவாத தொகை ஒன்றை நிறுவனத்தில் பின்வருமாறு வைப்பு செய்ய வேண்டும். ரூ. 5,000,000/- (ஐம்பது இலட்சம்) இவ்வைப்பானது முகவராக / விநியோகத்தராக தெரிவு செய்யப்பட்டு Bank Draft மூலமாக நிறுவனத்துக்கு வழங்கப்பட வேண்டும். இது நிறுவனத்தால் கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட முன்னர் வழங்கப்பட வேண்டும். / அத்துடன் இவ்வைப்பு / ராஜீனாமா / அல்லது ரத்துச்செய்யப்படும் போது மீளளிக்கப்படும் ஆயினும் நிறுவனத்திற்கு கொடுப்பனவு இருப்பின் அல்லது கலப்படம் செய்தால் ரத்துச் செய்யப்படும் இவ்வைப்பிற்கு வட்டி வழங்கப்படமாட்டாது.

(ஈ) விநியோகத்தர் தெரிவு செய்த பின் எரிபொருள் விநியோகத்தை நிறுவனம் திருப்தி அடையும் முறையில் நடாத்த தேவையான பணத்தை முதலீடு செய்யக்கூடியவராக இருக்க வேண்டும்.

(உ) விண்ணப்பதாரி திடமான உடல் நலம் மற்றும் மன ஆரோக்கியம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(உ) விண்ணப்பதாரி கீழ் குறிப்பட்ட அடிப்படை தேவைகளை வழங்கவேண்டும்

குடிநீர், முதலுதவி உபகரணம், தூய்மையான மலசலகூட வசதி, தொலைபேசி, தேவையான வெளிச்சம், மின் உற்பத்தி உபகரணம், பாதுகாப்பு தீயணைக்கும் உபகரணங்கள், மணல் வாளிகள் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவை

**பொது வீதிமுறைகள்**

1. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவங்களின் இணைப்பு (அ) இல் உள்ளவாறு பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களை இணைக்கவும்.
2. விண்ணப்பதாரிகள் நிரப்பிய விண்ணப்பத்துடன் ரூ. 2000 இற்கான Bank Draft ஒன்றை Lanka IOC PLC என்ற பெயரில் சமர்ப்பிக்க வேண்டும்.
3. விண்ணப்பதாரர் சோதனை படிவத்தை (ஆ) இணைப்பின் படி விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் இணைக்கவும்.
4. லங்கா ஐ ஒ சி நிறுவனம் இந்த விளம்பரத்தை ரத்து செய்யவோ, திருப்பி அழைக்கவோ, மாற்றம் செய்யவோ அல்லது இறுதி திகதியை நீடிக்கவோ, காரணம் குறிப்பிடாது செய்வதற்கு சகல உரிமையும் கொண்டது.
5. இறுதி திகதிக்குப்பின் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும், (தபால் தாமதமாகி இருப்பினும்) பூர்த்தியாகாத விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படாது.
6. சத்திய வாக்கு மூலம் இணைப்பு 'இ' உடன் மூலப்பிரதி (originals) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் சகல ஆவண பிரதிகளும் (copies) சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆயினும் நிறுவனம் கேட்கும்போது மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
7. ஒரு விண்ணப்பதாரி ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு விண்ணப்பங்களை தனித்தனியாக விண்ணப்பிக்கலாம்.
8. விண்ணப்பதாரர் கொடுத்த விபரங்கள் உண்மையற்றவையாக காணப்படின், காரணம் காட்டாது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அத்துடன் விண்ணப்பதாரி விநியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்தால் விநியோக அனுமதிப்பத்திரமும் ரத்துச் செய்யப்படும். இதன் போது விண்ணப்பதாரி எந்த இழப்பீடுகளையோ உரிமைகளையோ கோர முடியாது.
9. இது ஒரு தூய வர்த்தக ஆலோசனை மட்டுமே, ஆகவே எந்த ஒரு இலாப நட்ட உத்தரவாதமும் வழங்கப்பட மாட்டாது. விநியோகஸ்தர் தெரிவுசெய்யப்பட்டு கட்டுமான பணிகள் முடிந்தவுடன் நிலையான ஒப்பந்தமொன்று LIOC நிறுவனத்தின் நிபந்தனைகளுடன் கைச்சாத்திடப்பட வேண்டும்.
10. லங்கா ஐ ஒ சி நிறுவனம் பணம் மூலமான எவ்வகையான கொடுப்பனவுகளையும் ஏற்றுக்கொள்ள மாட்டாது என்பதனை வேண்டிக்கொள்வதுடன் பெற்றோல் நிரப்பு நிலைய அனுமதிபத்திரம் (LOI) வழங்க முன்னர் எவ்விதமான (காசோலை/ பண மூலம்/ வங்கிக் காசேடு) கொடுப்பனவுகளையும் ஏற்றுக்கொள்ள மாட்டாது. நிறுவனத்தால் பெற்றோல் நிரப்பு நிலைய கட்டுமானப் பணிகள் ஆரம்பித்த பின்னரே அதற்கான கட்டணங்கள் அறவிடப்படும்.
11. இது ஒரு விண்ணப்பம் மாத்திரமே விநியோகத்தவருக்கான உத்தரவாதம் அல்ல.
12. லங்கா ஐ ஒ சி நிறுவனம் பெற்றோல் நிரப்பு நிலைய அனுமதிப்பத்திரம் வழங்க எந்த ஒரு தனி நபரையும் நேரடியாக நியமித்ததில்லை. நிரப்பு நிலைய அனுமதிப்பத்திரம் முறையாக விண்ணப்பப்படிவங்களை தீர விசாரிக்கப்பட்டு / பரிசோதிக்கப்பட்டு நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் கொண்ட குழுவினால் (HOD) மாத்திரமே தீர்மானிக்கப்படும்.
13. லங்கா ஐ ஒ சி நிறுவனம் பெற்றோல் நிரப்பு நிலைய அனுமதிப்பத்திரம் மேற்குறிப்பிட்ட முறையில் மாத்திரமே இடம்பெறும். அது தவிர வேறு எந்த நபர்களை இவ்விடயம் சம்பந்தமாக நியமித்தது இல்லை. எந்தவொரு தனி நபர்களும் இவ்விடயம் சம்பந்தமாக செய்யும் நடவடிக்கைகளுக்கு எமது நிறுவனம் பொறுப்பேற்க மாட்டாது.
14. விநியோகத்தவருக்கான இறுதி தேர்வு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை மதிப்பீடு செய்த பின்னரே தீர்மானிக்கப்படும்
15. இணைப்பு 'அ' இல் உள்ள விண்ணப்பப்படிவம் எந்தவொரு இடத்திற்கும் விண்ணப்பிக்க உபயோகிக்கலாம். **விண்ணப்பத்தை லங்கா ஐ ஒ சி இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் www.lankaioc.com**

**உதவி மேசை**

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொள்ளவும். உதவி முகாமையாளர் - விற்பனை **075-9278015 / 0112 475720** காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை (வேலை நாட்களில்)

**விண்ணப்பங்கள் அனுப்பும் இறுதித்திகதி**

நிரப்பிய விண்ணப்பங்களை தேவையான ஆவணங்களுடன், 21.09.2020 அன்று பி.ப. 5.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் விலாசத்திற்கு கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும் விண்ணப்பப்படிவம் சகல ஆவணங்களுடன் ஒட்டப்பட்ட கடித உறையில் இடது பக்க மூலையில் "**எரிபொருள் விநியோகஸ்தருக்கான விண்ணப்பம்**- ..... (இடம்)" என்று தடித்த எழுத்தில் எழுதப்பட வேண்டும்.

**சீரேஷ்ட உப தலைவர் (விற்பனை)**
**Lanka IOC PLC**
**20 ஆம் மாடி மேற்கு கோபுரம்**
**உலக வர்த்தக மையம், கொழும்பு 01.**